எடப்பாடி K. பழனிசாமி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009

தேதி 26.6.2019

# வாழ்த்துச் செய்தி

அமெரிக்கா நாட்டில், சிகாகோ நகரத்தில் நடைபெறும் அனைத்துலகத் தமிழ் ஆய்வு மன்றத்தின் பத்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, வடஅமெரிக்கா தமிழ்ச் சங்கப் பேரவையின் 32-ம் ஆண்டு விழா மற்றும் சிகாகோ தமிழ்ச் சங்கத்தின் பொன் விழா நிகழ்ச்சிகள், 2019-ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 4 முதல் 7-ம் தேதி வரை நடைபெறுவது அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவில் நான் பங்கேற்க விரும்பிய போதிலும் முக்கிய அலுவல் காரணமாக என்னால் கலந்து கொள்ள இயலவில்லை. இந்த இனிய விழாவில் பங்கேற்கவுள்ள அனைத்துத் தாய்த்தமிழ் உறவுகளுக்கும், தமிழ்நாடு அரசின் சார்பாக என் இதய பூர்வமான நல் வாழ்த்துகளை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகை செய்தல் வேண்டும்"** எனும் பாரதியின் வாக்கின்படி, கடல் கடந்து பணி செய்து வரும் தமிழ் மக்கள், தங்களது திறமையாலும், உழைப்பாலும் வளம் பெற்று, "தமிழ்" என்னும் தங்கள் தாயை மறக்காமல் தமிழ் தொண்டு செய்வது மிகவும் பாராட்டுக்குரியது.

பத்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களும், இந்தியர்களும் பன்னாட்டுச் சமூகத்தினரை சந்தித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கும் தமிழ் ஆராய்ச்சியை மேலும் செம்மைப்படுத்திக் கொள்வதற்குமான ஓர் அரிய வாய்ப்பினை உருவாக்கித் தருவது பாராட்டுக்குரியதாகும்.

பத்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, தமிழ்ச் சங்கப் பேரவையின் 32–ம் ஆண்டு விழா மற்றும் சிகாகோ தமிழ்ச் சங்கத்தின் பொன்விழா நிகழ்வுகள் சிறப்புடன் நடைபெறவும், கடல் கடந்து வாழும் தமிழர்களை ஒருங்கிணைக்கும் பாலமாக இந்த விழா அமைந்திடவும் எனது உளமார்ந்த வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

எ. பழனிசாமி

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்